# வேதாகமத்தின் மாபெரும் சத்தியங்கள்

## பாடம் – 52

# யுகங்களை பற்றிய வரைபடத்தின் விளக்கம்




## The Explanation of the Chart of the Ages

Bible Research and Study Centre

# வேதாகமத்தின் மாபெரும் சத்தியங்கள்

## யுகங்களை பற்றிய வரைபடத்தின் விளக்கம்

## The Explanation of the Chart of the Ages

கிறிஸ்து இயேசுவுக்குள் மிகவும் பிரியமான சகோதர சகோதரிகளே,

தேவனுடைய பெரிதான கிருபையினால் , தேவனுடைய தெய்வீகத் திட்டத்தையும் அதின் விபரங்களையும் நாம் அறிந்து உணர்ந்திருக்கின்றோம். இந்த வேத ஆராய்ச்சியின் துவக்கத்தில், நீங்கள் முதன்முதலாக ..யுகங்களைப் பற்றின வரைபடத்தை பார்த்தபொழுது, ஏதோ புதிதான ஒன்றை பார்த்ததுபோல உணர்ந்தது உங்களுக்கு நினைவிருக்கலாம். ஆனால் இன்றோ, மனுக்குலத்திற்கு மகா சிருஷ்டிகர் வரைந்துள்ள தெய்வீகத் திட்டத்தின் மாதிரி என்று இந்த வரைபடத்தை நன்கு உணர்ந்திருக்கிறீர்கள்.

இந்த வரைபடத்தின் விபரங்களை ஒவ்வொரு வகுப்பிலும், தனித்தனியாக ஆராய்ந்து ஆழமாகப் புரிந்திருக்கிறோம். ஆனால் இன்று நாம் சற்று வேறுபட்ட கோணத்தில் இந்த வரைபடத்தை முழுமையாக கற்றறிய இருக்கிறோம். ஆம்... யுகங்களைப் பற்றின வரைபடத்தைA-(முதல் Zவரை) முழுமையாக ஆராயப்போகிறோம்.

இப்பொழுது இந்த வரைபடத்தை மூன்று வழிகளில் கற்றுக்கொள்ள இருக்கிறோம் -

1) வரைபடத்தில் பெரிய எழுத்துக்களில் ⇨ **A முதல் Zவரை**


2) ,, சிறிய எழுத்துக்களில ⇨ **a முதல் b வரை**


3) ,, 1 முதல் 11 வரையிலான எண்கள

இன்றைய பாடத்தை நாம் கவனிக்கையில், வரைபடத்தை கூர்ந்து கவனிப்பது அவசியம். இப்பொழுது நாம் வரைபடத்தின் விளக்கப்பகுதிக்கு கடந்துசெல்வோம் -

1) பெரிய எழுத்துக்களில் **A முதல Zவரை**

**A** நாம் பெரிய எழுத்து**'A' - தேவனுடைய திட்டத்தில் முதலாவது மிகப்பெரிய காலப்பகுதியான 'முதலாம் உலகத்தைக்" குறிக்கிறது.** இது ஆதாமின் சிருஷ்டிப்பில் துவங்கி ஜலப்பிரளயம் வரையிலான - 1656 வருட காலப்பகுதியைக் குறிக்கிறது. இதை வேத வசனங்களில் - **"அப்பொழுது இருந்த உலகம்"** (1பேதுரு 3:6) என்று அழைக்கிறோம்.




**B** இங்கு பெரிய எழுத்து**'B' தேவ திட்டத்தின் மிகப்பெரிய காலகட்டமாகிய 'இரண்டாம்**

**உலகத்தைக்" குறிக்கிறது**. இது ஜலப்பிரளயத்தில் துவங்கி நாம் வாழ்ந்து கொண்டிருக்கிற முடிவுகாலம் மட்டும் தொடர்கிறது.


இதை வேத வசனங்களில் -

**"அக்கினிக்கு இரையாக வைக்கப்பட்டிருக்கிற"** (2பேதுரு 3:7)என்று வாசிக்கிறோம்.

இந்த காலப்பகுதி வேத வசனங்களில் -

**"இப்பொழுது இருக்கிற வானமும் பூமியும்"** (2பேதுரு 3:7)

அல்லது '..இப்பொழுது இருக்கிற பொல்லாத உலகம்" (கலாத்தியர் 1:4) என்று அழைக்கப்படுகிறது.





C இங்கு பெரிய எழுத்து **'C' தேவனுடைய திட்டத்தில் மூன்றாவது மிகப்பெரிய காலக்கட்டமும் முடிவில்லாததுமான 'மூன்றாம் உலகத்தைக்" குறிக்கிறது.**

இது 6000 வருடத்தின் முடிவாகிய 1874ம் வருடம் துவங்கி நித்திய யுகமாகிய 'யுகாயுகம்"(எபேசியர் 3:21) வரைக்கும் நீடிக்கிறது. இக்காலப்பகுதியானது -

'நீதி வாசமாயிருக்கும் புதிய வானமும் புதிய பூமியும்" (2பேதுரு 3:13) என்று அழைக்கப்படுகிறது.


இங்கு, இரண்டாவது மூன்றாவது உலகங்களுக்கு இடையில் ஒரு வித்தியாசமான காலப்பகுதி இருப்பதைக் காண்கிறோம். இது உண்மையில் நாம் இப்பொழுது வாழ்ந்துவருகிற காலப்பகுதியாகும்.




D இங்கு பெரிய எழுத்து **'D' இரண்டாம் உலகத்தில் உள்ள 'மூன்று யுகங்களில்" முதலாவதைக் குறிக்கிறது.** இது **'முற்பிதாக்கள் யுகம்"** என்றழைக்கப்படுகிறது. இது தனிப்பட்ட நபர்களோடு தேவன் தொடர்புகொண்டு அவர்களிடம் உடன்படிக்கையை ஏற்படுத்தியிருந்த காலப்பகுதியைக் குறிக்கும். இவர்கள் 'முற்பிதாக்கள்" என்று அழைக்கப்படுகிறார்கள். மேலும் இந்த யுகம் நோவாவின் நாட்களில் சம்பவித்த ஜலப்பிரளயத்திற்கு பின்பு துவங்கி, ஆபிரகாம், ஈசாக்கு போன்றவர்களோடு தொடர்ந்து கிமு1812ம் வருடம் யாக்கோபின் மரணத்தில் முடிவடைந்தது.ஜலப்பிரளயம் சம்பவித்த வருடத்தை பின்வருமாறு நாம் கணக்கிடுகிறோம் -

**4128 - 1656 = 2472 கிமு**


எனவே இந்த யுகம் கிட்டத்தட்ட 659 வருடங்களுக்கு நீடித்திருக்கவேண்டும்(2471 - 1812) (இங்கு ஜலப்பிரளயம் சம்பவித்தது ஒரு வருடம் கழித்து கணக்கீட்டை ஆரம்பிக்கிறோம்)




E இங்கு பெரிய எழுத்து **E இரண்டாம் உலகத்தில் உள்ள இரண்டாவது 'யுகத்தை" குறிக்கிறது.** இக்காலப்பகுதியானது 'யூத யுகம்" என்றழைக்கப்படுகிறது. இது யாக்கோபின் மரணத்தில் துவங்கி ஆசீர்வாத காலமாகிய 'எழுபது வாரங்கள்"(தானியேல் 9:24) முடிவுவரை நீடிக்கிறது. இக்காலப்பகுதியில் யாக்கோபின் பன்னிரெண்டு குமாரர்களுடைய பன்னிரெண்டு கோத்திரங்களை மாத்திரம் தேவன் அறிந்துகொண்டு தம்முடைய விசேஷமான ஆசீர்வாதங்களை அவர்களுக்கு அளித்து வந்தார் என்று வாசிக்கிறோம் -


**ஆமோஸ் 3:2**

**"பூமியின் எல்லா வம்சங்களுக்குள்ளும் உங்களை மாத்திரம் அறிந்துகொண்டேன். ஆகையால் உங்களுடைய எல்லா அக்கிரமங்களினிமித்தமும் உங்களைத் தண்டிப்பேன்"**




f இங்கு பெரிய எழுத்து **'F' இரண்டாம் உலகத்தில் உள்ள 'மூன்றாவது 'யுகத்தைக்" குறிக்கிறது.** இக்காலப்பகுதியானது - **'சுவிசேஷயுகம்"** என்றழைக்கப்படுகிறது. இது இயேசுவின் ஞானஸ்நானத்தில் துவங்கி , கிறிஸ்துவின் சரீர அங்கங்களின் நிறைவடைதலில் முடிகிறது. இந்த காலப்பகுதியில் கிறிஸ்துவின் சரீர அங்கங்களாகிய - 144000(வெளிப்படுத்தல் 14:1) அங்கத்தினர்கள் தேர்ந்தெடுக்கப்படுவதற்கான அழைப்பு 'விடப்பட்டு" அவர்கள் உருவாக்கப்படுகிறார்கள். இந்த யுகத்தின் முடிவோடு இரண்டாம் உலகம் முடிவுக்கு வருவதை புள்ளியான கோடுகள் குறிக்கிறதை நாம் காண்கிறோம்.

g இங்கு பெரிய எழுத்து **'G' மூன்றாம் உலகத்தின் 'முதலாம் யுகத்தைக்" குறிக்கிறது.** இக்காலப்பகுதியானது - **'ஆயிரமாண்டு யுகம் அல்லது மேசியாவின் யுகம்"** என்று அழைக்கப்படுகிறது. இது நம்முடைய கர்த்தரின் இரண்டாம் வருகையின் வருடமாகிய 1874ல் துவங்கி




அவருடைய 1000வருட அரசாட்சி நிறைவடைகிற வருடமாகிய **2874 முடிவடைகிறதை வாசிக்கிறோம்**

**வெளிப்படுத்தல் 20:4**

**“அவர்கள் உயிர்த்து கிறிஸ்துவுடனேகூட ஆயிரம் வருஷம் அரசாண்டார்கள்”**

இது அரசாட்சி மற்றும்.. உயிர்த்தெழுதல் மற்றும் திரும்பக் கொடுத்தல் மற்றும் உலகம் நியாயம் தீர்க்கப்படுகிற காலப்பகுதியாகும்(அப்போஸ்தலர் 17:31).


**H** இங்கு பெரிய எழுத்து **‘H’ மேசியா யுகம் நிறைவடைந்ததற்கு பின்பு வருகிற காலப்பகுதியைக் குறிக்கிறது.** இது வேதத்தில் ஒரே ஒரு வசனத்தில் மாத்திரம் குறிப்பிடப்பட்டுள்ளது.

அது **எபேசியர் 2:7** ‘வரப்போகிற காலங்கள்”

இது நித்தியத்திற்கும் நீடிக்கிற காலப்பகுதியாக இருந்து பரிபூரணமான மனுக்குலத்திற்கான தேவனுடைய திட்டம் துவங்குகிற காலப்பகுதியாக இருக்கும்.

**I & J** இங்கு பெரிய எழுத்து **I & J** வரைபடத்தில் காணப்படுவதில்லை. மகா சிருஷ்டிகராகிய தேவன் I ‘இருக்கிறவராகவே இருக்கிறேன்” (யாத்திராகமம் 3:14) என்று ஆங்கிலத்தில் அழைக்கப்படுவதினாலும்... J எழுத்து பிதாவினுடையநாமமாகிய - யேகோவா மற்றும் அவருடைய ஒரேபேறானகுமாரனுடைய நாமம் இயேசு என்பதன் ஆங்கில பதத்தின் துவக்க எழுத்தாக இருப்பதினால் பயன்படுத்தப்படாமலிருக்கலாம்.

**K** இங்கு பெரிய எழுத்து **‘k’ ஒரு ‘ஜீவனுக்குரிய தளத்தை” குறிக்கிறது.** அது உண்மையில் சர்வலோகத்திலும் உயர்ந்தபட்ச ஜீவநிலையைக் குறிக்கிற தளமாக இருக்கிறது. ஆம். **அது அழியாமை மற்றும் தெய்வீக சுபாவ நிலையாகும்.** இத்தளத்தில் மனிதனுடைய சிருஷ்டிப்பின்போது ஒருவர் மாத்திரமே இருந்தார் **- அவர் பரலோக பிதாவும், சிருஷ்டிகருமான - தேவன் என்று வாசிக்கிறோம்.**




**1தீமோத்தேயு6:16**

“ஒருவராய் சாவாமையுள்ளவரும்,
சேரக்கூடாத ஒளியில்
வாசம்பண்ணுகிறவரும்,
மனுஷரில் ஒருவரும் கண்டிராதவரும், காணக்கூடாதவருமாயிருக்கிறவர்.

**அவருக்கே கனமும் நித்திய வல்லமையும் உண்டாயிருப்பதாக ஆமென்"**

ஆனால் கல்வாரியில் மூன்றாம் நாளுக்குப் பிறகு இயேசுவை எழுப்பினபோது, அவரையும் இந்த அழியாமையின் தளத்திற்கு உயர்த்தினார் என்று வாசிக்கிறோம்.

**யோவான் 5:26**

**"ஏனெனில், பிதாவானவர் தம்மில்தாமே ஜீவனுடையவராயிருக்கிறதுபோல, குமாரனும் தம்மில்தாமே ஜீவனுடையவராயிருக்கும்படி அருள்செய்திருக்கிறார்"**

**வெளிப்படுத்தல் 1:18**

**"மரித்தேன், ஆனாலும் இதோ சதாகாலங்களிலும் உயிரோடிருக்கிறேன்,ஆமென்"**


ஆம். இயேசுவிற்கு அடுத்தபடியாக இந்த திவ்விய சுபாவத்திற்கு ஏதுவான 'மகா மேன்மையும் அருமையுமான வாக்குத்தத்தங்களை" தேவன் இயேசுவின் சபைக்கு அவருடைய அடிச்சுவடுகளில் உண்மையாக பின்பற்றினதற்கான பலனாக தருவதை வாசிக்கிறோம் -

**2பேதுரு 1:4**

**"அவர் இயேசுகிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுந்ததினாலே, அழியாததும் மாசற்றதும் வாடாததுமாகிய சுதந்திரத்திற்கேதுவாக, ஜீவனுள்ள நம்பிக்கை உண்டாகும்படி, தமது மிகுந்த இரக்கத்தின்படியே நம்மை மறுபடியும் ஜெநிப்பித்தார்"**

**ரோமர் 2:7**

**"சோர்ந்துபோகாமல் நற்கிரியைகளைச் செய்து, மகிமையையும் கனத்தையும் அழியாமையையும் தேடுகிறவர்களுக்கு நித்திய ஜீவனை அளிப்பார்"**





இங்கு பெரிய எழுத்து 'L' இரண்டாவது 'ஜீவனுக்குரிய தளத்தையும்"ஆவிக்குரிய ஜீவ நிலையாகிய பரலோகத்தின் தூதர்களுடைய நிலையைக் குறிக்கிறது. இவர்கள் அனைவரும் 'ஆவிக்குரிய சரீரங்களை" பெற்றிருந்து மரணத்திற்கு ஏதுவான சுபாவத்தில் இருக்கிறார்கள். அதாவது அவர்கள் மரிப்பதற்கான நிலைமை உள்ளது. இந்த நிலையில் நம்முடைய ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவே முதலாவது சிருஷ்டிக்கப்பட்டவர் ஆவார். மேலும் சாத்தான் மற்றும் விழுந்துபோன தூதர்களும் இந்த ஜீவனுக்குரிய தளத்திலேயே இருக்கிறார்கள். மேலும் மரிக்கப்போகிறவர்களாகவும் இருக்கிறார்கள்(மத்தேயு 25:41,46 ஐ பார்க்கவும்).

இந்த 'ஜீவனுக்குரிய தளமானது" 'நித்தியமான அக்கினி" என்றும், 'நித்திய நியாயத்தீர்ப்பு" என்றும் வசனங்களில் சொல்லப்படுகிறது. இவ்விதமாக... நித்தியமான அழிவை பற்றி இது சொல்கிறது. மனித வாழ்வின் நிலைமையைவிட இது சற்று உயர்வானது. வாசிக்கலாம் -

**சங்கீதம் 8:5**

**"நீர் அவனைத் தேவதூதரிலும் சற்று சிறியவனாக்கினீர். மகிமையினாலும் கனத்தினாலும் அவனை முடிசூட்டினீர்"**

m இங்கு பெரிய எழுத்து **'M' சுவிசேஷயுகத்தில் மாத்திரம் காணப்படுகிற'ஜீவனுக்குரிய தளத்தை" குறிக்கிறது.** அது ஆவியினால் ஜெனிப்பிக்கப்பட்ட நிலையாகும். **இது தங்களுடைய தற்போதைய சரீரங்களை 'ஜீவ பலியாக" ஒப்புக்கொடுக்கிற கிறிஸ்தவர்கள் அடைகிற நிலையாகும்.**




**ரோமர் 12:1**

**"அப்படியிருக்க சகோதரரே, நீங்கள் உங்கள் சரீரங்களைப் பரிசுத்தமும் தேவனுக்குப் பிரியமுமான ஜீவபலியாக ஒப்புக்கொடுக்கவேண்டுமென்று, தேவனுடைய இரக்கங்களை முன்னிட்டு உங்களை வேண்டிக் கொள்கிறேன். இதுவே நீங்கள் செய்யத்தக்க புத்தியுள்ள ஆராதனை"**

மேலும் இவர்கள் புது சிருஷ்டிகளாக மாறுவதாக வாசிக்கிறோம்.

**2கொரிந்தியர் 5:17**

**"இப்படியிருக்க, ஒருவன் கிறிஸ்துவுக்குள் இருந்தால் புதுச் சிருஷ்டியாயிருக்கிறான். பழையவைகள் ஒழிந்துபோயின. எல்லாம் புதிதாயின"**

இவர்கள் தீமை நிறைந்த உலகத்தில் பாடுகளின் வழியாக நீதிக்கு உட்பட்டு வாழ முயற்சித்து இந்த வளர்ச்சியை மாம்சத்தில் இருக்கும்போதே அடைகிறார்கள்.

**2தீமோத்தேயு 3:12**


**"அன்றியும் கிறிஸ்து இயேசுவுக்குள் தேவபக்தியாய் நடக்க மனதாயிருக்கிற யாவரும் துன்பப்படுவார்கள்"**

ஆம். இந்த 'புது சிருஷ்டி" கிறிஸ்தவர்கள், தங்களுடைய மரணத்திற்குப் பின்பு, அவர்களுடைய உயிர்த்தெழுதலில் ஆவிக்குரிய ஜீவிகளாக(யோவான் 3:8) 'ஆவியினால் பிறக்கிறார்கள்" இந்த புது சிருஷ்டிகள் இருவிதமான நிலைகளில் ஆவிக்குரிய ஜீவிகளாக மாற்றப்படுகிறார்கள்.

**சிறு மந்தை** - **இவர்கள் அழியாமையாகிய திவ்விய சுபாவத்தில் இருப்பார்கள்**


**திரள்கூட்டம்** - **இவர்கள் அழியக்கூடிய தூதர்களுக்குரிய நிலைமையில் இருப்பார்கள்.**

**N** இங்கு பெரிய எழுத்து **'N' ஒரு 'ஜீவனுக்குரிய தளத்தை" குறிக்கிறது. அது - பரிபூரண மாம்சீக அல்லது நீதிமானாக்கப்பட்ட நிலையாகும்** இந்த நிலையை இரண்டு பரிபூரண மனிதர்களாகிய ஆதாமும் மற்றும் இயேசுகிறிஸ்து மட்டுமே பெற்றிருந்தனர். இந்த நிலையிலிருப்பவர்கள் பரிபூரணமான மாம்சீக சரீரத்தை பெற்று சுபாவத்தில் அழியக்கூடிய நிலைமையில் இருப்பார்கள். இதன்மூலம் பாவம் செய்தல் மரணத்திற்கு வழிநடத்தும் என்பது வெளிப்படுத்தப்பட்டது. இது முதலாவது பரிபூரண மனிதனாகிய ஆதாமின் வாழ்க்கையில் காண்பிக்கப்பட்டது. இந்த ஜீவனுக்குரிய தளத்தை ஆயிரமாண்டின் யுகத்தில் மனுக்குலம் அனைவரும் சென்றடைவதற்கான வாய்ப்பை பெறுவார்கள்.




**O** பெரிய எழுத்து O -வரைபடத்தில் காணப்படுவதில்லை.

**P** இங்கு பெரிய எழுத்து **'P' ஒரு விநோதமான 'ஜீவனுக்குரிய தளத்தை" குறிக்கிறது.** அது யூத யுகத்தில் மாத்திரம் நீடித்திருந்தது. **அது - இஸ்ரயேல் தேசத்தின் நிழலான நீதிமானாக்கப்பட்ட நிலையாகும்.** இதை அவர்கள் வருடந்தோறும் ஏறெடுத்த பாவநிவாரண பலிகளின்மூலம் பெற்றார்கள்.




**லேவியராகமம் 16:30,34**

**"கர்த்தருடைய சந்நிதியில் உங்கள் பாவமெல்லாம் நீங்கிச் சுத்திகரிக்கப்படும்படி, அந்நாளில் உங்களைச் சுத்திகரிக்கும்பொருட்டு உங்களுக்காகப் பாவநிவர்த்தி செய்யப்படும். இப்படி வருஷத்தில் ஒருமுறை இஸ்ரயேல் புத்திரருக்காக, அவர்களுடைய சகல பாவங்களுக்கும் பாவநிவர்த்தி செய்யக்கடவன்"**

இந்த பலிகளானது அவர்கள் கர்த்தருக்கு முன்பாக 'நிழலாக" பரிசுத்தமாக்கப்பட உதவியது. இதன்மூலம் அவர்கள் வரைபடத்தில் காண்பிக்கப்பட்டுள்ளபடி மற்ற உலகத்தாரைக் காட்டிலும் ஒரு உயர்ந்த நிலையில் நிலைநிறுத்தப்பட்டிருந்தனர். ஆனால் அவர்கள் உண்மையில் பரிபூரணமாக்கப்பட்ட நிலையை அடையவில்லை. ஏனெனில் 'தளம்" P என்பது உண்மையில் பூரணமாக்கப்பட்ட மாம்சீக நிலையை குறிக்கிற தளம்N ஐக்காட்டிலும் தாழ இருப்பதை காண்கிறோம்

**Q** இங்கு பெரிய Q எழுத்து வரைபடத்தில் காணப்படுவதில்லை


**R** இங்கு பெரிய எழுத்து **'R' என்பது ஒரு 'ஜீவனுக்குரிய தளத்தை" குறிக்கிறது.** அந்த




தளத்தில் முழு மனுக்குலமும் ஏதேன் தோட்டத்தில் பாவத்தில் விழுந்ததிலிருந்து காணப்படுகிறார்கள். **அது - பாவத்திற்குள் விழுந்துபோன நிலை மற்றும் மரணநிலையைக் குறிக்கிறது.** இந்த நிலை ஒரு மரித்த சரீரத்தை உள்ளடக்கியுள்ளது. இந்த சரீரம் தாயின் கர்ப்பத்தில் மரிக்கத் துவங்கி கல்லறையில் மரணத்தில் முடிகிறது. இந்த நிலையில் ஜீவனுக்கான அல்லது வாழ்வதற்கான எந்த உரிமையும் காணப்படுவதில்லை. இதோடு ‘மரித்த” நிலையாக தேவனுடைய பார்வையிலும், கர்த்தராகிய இயேசுவின் பார்வையிலும் கருதப்பட்டு, முழு உலகமும் தற்போது இந்த நிலையில் இருப்பதாக குறிப்பிடப்படுகிறது.

**லூக்கா 9:60**

**“மரித்தோர் தங்கள் மரித்தோரை அடக்கம்பண்ணட்டும்”**




S இங்கு பெரிய எழுத்து **‘S’ - நம் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் இரண்டாம் வருகையின் வருடமாகிய 1874ம் வருடத்திற்கு பின்பு வருகிற காலபகுதியைக் குறிக்கிறது. அது - ‘சுவிசேஷயுகத்தின் அறுவடை காலம்”...** அதே சமயம் ‘ஒரு உபத்திரவக் காலமுமாக” இருக்கிறது. இது இங்கு ஆரம்பித்து... சபையின் நிறைவு மற்றும் களைகள் சுட்டெரிக்கப்படும்வரை நீடிக்கும்(மத்தேயு 13:30).


இவையனைத்தும் ‘மகா உபத்திரவ காலம்” என்றழைக்கப்படுகிற இரண்டாம் உலகத்தின் முடிவில் சம்பவிக்கிறது. மேலும் இவையனைத்தும் இரண்டாம் மற்றும் மூன்றாம் உலகங்கள் ஒன்றுக்கொன்று பிணைந்து காணப்படுகிற விநோதமான காலப்பகுதியில் சம்பவிக்கிறது. இதுசமயம், சபையின் தனிப்பட்ட தேர்ந்தெடுத்தல் நிறைவடைந்து.. கள்ளசபை அமைப்புகள் நியாயந்தீர்க்கப்பட்டு அழிக்கப்படுகிறது.

மேலும் இந்தக் காலப்பகுதியில் இஸ்ரயேல் தேசம் திரும்பக் கட்டப்பட்டு ஒரு தேசமாக ஆசீர்வாத காலத்தை 1948ம் வருடம் மே மாதம் 14ம் தேதி முதல் நெருங்கத் துவங்குகிறது

T, U ,V இங்கு பெரிய எழுத்து T,U,V வரைபடத்தில் காணப்படுவதில்லை.

W இங்கு பெரிய எழுத்து **‘W’ தேவனுடைய இராஜ்யம் கண்ணுக்குத் தெரிகிறபடி இஸ்ரயேல் தேசத்தில் ஸ்தாபிக்கப்பட்ட பின்பு உள்ள உலக ஜனங்களின் நிலையைக் குறிக்கிறது**

இது பரிபூரண மாம்சீக நிலைக்கும்.. ஜீவனுக்கும் உயர்த்தப்பட்ட நிலையாகும். இது




பெரும்பாதையான பரிசுத்தவழி(ஏசாயா 35:8) என்றழைக்கப்படுகிற ஜீவ வழியின் மூலம் படிப்படியாகத் தரப்படுகிறது. இது சமயம் ஒட்டுமொத்த மனுக்குலமும் கல்லறையிலிருந்தும் 'மரித்த" நிலையிலிருந்தும், தங்களுடைய 'புரிந்துகொள்ளுதலின் கண்கள் மற்றும் காதுகள்" திறக்கப்பட்டு திரும்புவார்கள் என்று வாசிக்கிறோம்.

**ஏசாயா 29:18**

**"அக்காலத்தில் செவிடர் புஸ்தகத்தின் வசனங்களைக் கேட்பார்கள். குருடரின் கண்கள் இருளுக்கும் அந்தகாரத்துக்கும் நீங்கலாகிப் பார்வையடையும்"**

மேலும் நீதியின் வழியை அவர்கள் படிப்படியாக கற்றுக்கொள்வார்கள் என்று வாசிக்கிறோம் -

**ஏசாயா 26:9**

**"என் ஆத்துமா இரவிலே உம்மை வாஞ்சிக்கிறது. எனக்குள் இருக்கிற என் ஆவியால் அதிகாலையிலும் உம்மைத் தேடுகிறேன். உம்முடைய நியாயத்தீர்ப்புகள் பூமியிலே நடக்கும்போது பூச்சக்கரத்துக் குடிகள் நீதியைக் கற்றுக்கொள்வார்கள்"**

ஆம். அவர்கள் அனைவரும் மாம்சீக பரிபூரணம் மற்றும் ஜீவன் பெற்றுக்கொள்கிற வாய்ப்பை அடைவார்கள் என்று வாசிக்கிறோம் -

**யோபு 33:25**

**"அப்பொழுது அவன் மாம்சம் வாலிபத்தில் இருந்ததைப் பார்க்கிலும் ஆரோக்கியமடையும். தன் வாலவயது நாட்களுக்குத் திரும்புவான்"**

ஆம். இது முழு மனுக்குலத்திற்கும் தேவன் திட்டமிட்டிருக்கிற மாபெரும் அருமையான இரட்சிப்பாகும்.

அப்பொழுது பரிபூரணமாக்கப்பட்ட உலக மனுக்குலம் ஆயிரமாண்டின் முடிவில் அதுவரை கட்டப்பட்டிருந்த சாத்தான் அவிழ்த்துவிடப்பட்டு, அதன்மூலம் அவர்களுடைய உண்மை மற்றும் குணலட்சணங்களில் சோதிக்கப்படுவார்கள் என்று வாசிக்கிறோம் -

**வெளிப்படுத்தல் 20:7-9**

**"அந்த ஆயிரம் வருஷம் முடியும்போது சாத்தான் தன் காவலிலிருந்து விடுதலையாகி, பூமியின் நான்கு திசைகளிலுமுள்ள ஜாதிகளாகிய கோகையும் மாகோகையும் மோசம்போக்கும்படிக்கும், அவர்களை யுத்தத்திற்குக் கூட்டிக்கொள்ளும்படிக்கும் புறப்படுவான். அவர்களுடைய தொகை கடற்கரை மணலத்தனையாயிருக்கும். அவர்கள் பூமியெங்கும் பரம்பி, பரிசுத்தவான்களுடைய பாளையத்தையும், பிரியமான நகரத்தையும் வளைந்துகொண்டார்கள். அப்பொழுது தேவனால் வானத்திலிருந்து அக்கினி இறங்கி அவர்களைப் பட்சித்துப்போட்டது"**

இந்த இறுதியான நியாயத்தீர்ப்புக்குப் பின்பு, சாத்தான் மற்றும் அவனுடைய சாயலைத் தரித்தவர்கள்

இரண்டாம் மரணத்தில் அழிக்கப்பட்டு, உண்மையுள்ள பரிபூரணமான மனுக்குலம் **ஒவ்வொருவரும் இராஜாக்களாக 'பூமிக்குரிய இராஜ்யத்தை சுதந்தரித்துக் கொள்வார்கள்"** (மத்தேயு25:34). என்று வாசிக்கிறோம்.

**வெளிப்படுத்தல் 22:5**


**"அங்கே இராக்காலமிராது, விளக்கும் சூரியனுடைய வெளிச்சமும்
அவர்களுக்கு வேண்டுவதில்லை. தேவனாகிய கர்த்தரே அவர்கள்மேல் பிரகாசிப்பார்.
அவர்கள் சதா காலங்களிலும் அரசாளுவார்கள்"**

**x ,y ,z** இங்கு பெரிய எழுத்துக்கள் ' X, Y, Z ' வரைபடத்தில் காணப்படுவதில்லை.

பெரிய எழுத்துக்களை கண்டறிந்தபின்பு இப்பொழுது நாம்

சிறிய எழுத்துக்கள் **a** முதல் **z** வரை காண்போம்.

**a** இங்கு சிறிய எழுத்து **'a' - தேவனுடைய முதலாவது மனித சிருஷ்டியாகிய ஆதாமைக் குறிக்கிறது.** அவர் தேவனுடைய 'சாயலிலும்.. ரூபத்தின்படியேயும்" சிருஷ்டிக்கப்பட்டதை வாசிக்கிறோம் -




**ஆதியாகமம் 1:26**

**"நமது சாயலாகவும் நமது ரூபத்தின்படியேயும் மனுஷனை
உண்டாக்குவோமாக. அவர்கள் சமுத்திரத்தின் மச்சங்களையும், ஆகாயத்துப் பறவைகளையும்,
மிருக ஜீவன்களையும், பூமியனைத்தையும், பூமியின்மேல் ஊரும்
சகல பிராணிகளையும் ஆளக்கடவீர்கள் என்றார் "**

அவர் ஜீவனோடும், ஜீவனுக்குரிய உரிமையோடும் பரிபூரணமாக சிருஷ்டிக்கப்பட்டிருந்தார். அதற்குப் பின்பு அவருக்கு 'ஏற்றதுணையாக"(ஆதியாகமம் 2:18) தேவன் ஏவாள் என்ற ஸ்திரீயை 'ஆதாமின் விலா எலும்பிலிருந்து"உண்டாக்கினதை நாம் வாசிக்கிறோம்


**ஆதியாகமம் 2:22**

**"தேவனாகிய கர்த்தர் தாம் மனுஷனில் எடுத்த விலா எலும்பை மனுஷியாக உருவாக்கி,
அவளை மனுஷனிடத்தில் கொண்டுவந்தார்"**

ஆம். அவளும் பரிபூரணமாக சிருஷ்டிக்கப்பட்டிருந்தாள். 'ஆதாமிலிருந்து" உண்டாக்கப்பட்டிருந்ததால், முழு மனுக்குலத்திற்கும் ஆதாம் தலையாகவும் பிதாவாகவும் இருந்தார்.

**அப்போஸ்தலர் 17:26**

**"மனுஷஜாதியான சகல ஜனங்களையும் அவர் ஒரே இரத்தத்தினாலே தோன்றப்பண்ணி,
பூமியின் மீதெங்கும் குடியிருக்கச்செய்து, முன் தீர்மானிக்கப்பட்ட காலங்களையும்
அவர்கள் குடியிருப்பின் எல்லைகளையும் குறித்திருக்கிறார்"**




**b** இங்கு சிறிய எழுத்து **'b' முதலாம் உலகத்தில் வாழ்ந்த மனுக்குலத்தைக் குறிக்கிறது**. இவர்கள் அனைவரும் ஆதிப்பெற்றோராகிய ஆதாம் மற்றும் ஏவாளிடமிருந்து பாவத்தையும் மரணத்தையும் சுதந்தரித்தவர்களாக.. அதே நிலையில் பிறந்ததை வாசிக்கிறோம் -

**சங்கீதம் 51:5**

**"இதோ, நான் துர்க்குணத்தில் உருவானேன்.**
**என் தாய் என்னைப் பாவத்தில் கர்ப்பந்தரித்தாள்"**

இந்த பாவம் மற்றும் மரண நிலையில் வாழ்வது **விசாலமான வழி** (மத்தேயு 7:13) என்றழைக்கப்படுகிறது . இதன் விளைவாக முதலாம் உலகத்தில் முழு மனுக்குலமும் பாவத்திலும் மரணத்திலும் உருவாக்கப்பட்டது. இந்த ஜனங்கள் அனைவரும் தூதர்கள் மனுஷ ஜாதியிலிருந்த ஸ்திரீகளோடு கலந்ததினால் சீர்கெட்டவர்களாகவும் -
... இராட்சதர்கள் என்ற ஒரு புதிய இனத்தை உருவாக்கினார்கள் என்று வாசிக்கிறோம் -

**ஆதியாகமம் 6: 4**

**"அந்நாட்களில் இராட்சதர் பூமியிலே இருந்தார்கள். பின்பு தேவகுமாரர் மனுஷ குமாரத்திகளோடே கூடுகிறதினால் , இவர்கள் அவர்களுக்குப் பிள்ளைகளைப் பெற்றபோது, இவர்களும் பூர்வத்தில் பேர்பெற்ற மனுஷராகிய பலவான்களானார்கள்"**

ஆம்,தூதர்களும்-மனிதர்களும் கலந்து உருவாக்கின இந்த புதிய இனம் மனுக்குலத்தை அனைத்துவிதமான பொல்லாங்கிற்கும் வழிநடத்தினதை வாசிக்கிறோம் -

**ஆதியாகமம் 6:5**


**"மனுஷனுடைய அக்கிரமம் பூமியிலே பெருகினது என்றும், அவன் இருதயத்து நினைவுகளின் தோற்றமெல்லாம் நித்தமும் பொல்லாததே என்றும் கர்த்தர் கண்டு.."**

இதினிமித்தம் அப்பொழுது இருந்த உலகத்தை(2பேதுரு 3:6) ஜலப்பிரளயத்தைக் கொண்டுவந்து தேவன் அழித்தார்.

**c** இங்கு சிறிய எழுத்து **'c' 'விசுவாசத்தின் தகப்பனாகிய" ஆபிரகாமைக் குறிக்கிறது** . இவர் தன்னுடைய ஒரே நேச குமாரனாகிய ஈசாக்கை தேவனுக்கு கீழ்ப்படிந்து பலியாக தருமளவிற்கு தேவன்மீது மிகப்பெரிய விசுவாசத்தை வெளிப்படுத்தினதை வாசிக்கிறோம் -

**ஆதியாகமம் 22:12**

**"பிள்ளையாண்டான்மேல் உன் கையைப்போடாதே. அவனுக்கு ஒன்றும் செய்யாதே,**



**நீ அவனை உன் புத்திரன் என்றும், உன் ஏகசுதன் என்றும் பாராமல் எனக்காக ஒப்புக்கொடுத்தபடியினால் நீ தேவனுக்குப் பயப்படுகிறவன் என்று இப்பொழுது அறிந்திருக்கிறேன் என்றார்"**

ஆம். இவர் **'தேவனுடைய சிநேகிதன்"** என்றழைக்கப்பட்டு தன்னுடைய விசுவாசத்தின்மூலம் நீதிமான் என்று எண்ணப்பட்டிருந்ததை வாசிக்கிறோம் -

**ஏசாயா 41:8**

**"என் தாசனாகிய இஸ்ரயேலே, நான் தெரிந்துகொண்ட யாக்கோபே, என் சிநேகிதனான ஆபிரகாமின் சந்ததியே.." மேலும்**


**யாக்கோபு 2:23**

**"அப்படியே ஆபிரகாம் தேவனை விசுவாசித்தான், அது அவனுக்கு நீதியாக எண்ணப்பட்டது என்கிற வேதவாக்கியம் நிறைவேறிற்று. அவன் தேவனுடைய சிநேகிதனென்னப்பட்டான்"**

எனவே இவர் பாவமற்ற பரிபூரண மனுஷனாக இல்லாமலிருந்தாலும் இஸ்ரயேல் தேசம் தோன்றுவதற்கு முன்பும், பாவநிவாரண நாள் கடைப்பிடிக்கப்பட்டதற்கு முன்பும், அவரை நீதிமான் எனப்பட்ட நிலைமையில் இங்கு காண்பிக்கிறோம்.

ஏனென்றால் தேவன் அவருடைய விசுவாசத்தை நீதியாக எண்ணினார். இவர் தேவனைப் பொருத்தமட்டில் விசேஷமானவராக இருந்து - வரும் காலத்தில் அவருடைய(ஆபிரகாம்) சந்ததியின் மூலம் முழு மனுக்குலத்திற்கும் இரட்சிப்பையும் , ஆசீர்வாதத்தையும் வாக்குத்தத்தமாக 'ஆபிரகாமின் உடன்படிக்கையை"(ஆதியாகமம் 22:16-18) மூலம் தேவன் அவரிடத்தில் ஏற்படுத்தினார்.


**d** இங்கு சிறிய எழுத்து **'d'** . **இரண்டாம் உலகத்தில் சீர்கெட்டுப்போன நிலையில் இருக்கும் உலக மனுக்குலத்தை குறிக்கிறது** ஆம். ஜலப்பிரளயத்திற்கு பின்பு நோவாவின் மூன்று குமாரராகிய - யாப்பேத், சேம் மற்றும் காம் மூலம் வந்ததை வாசிக்கிறோம். ஆதியாகமம் 9:18,19 தற்போது இருக்கும் அனைத்து மனுஷ ஜாதியும் நோவாவின் குமாரர்களின்மூலம் உண்டாக்கப்பட்டார்கள்.




- யாப்பேத் ஐரோப்பாவின் வெள்ளை இன மக்களுக்கு தந்தையானான்
- சேம் ஆசிய பகுதிகளிலுள்ள இனத்தாருக்கு தந்தையானான்
- காம்.. கருப்பர் இன மக்களுக்கு தந்தையானான்

இந்த உலகமும் பாவம் மற்றும் மரண நிலையிலேயே உருவாக்கப்பட்டது. இந்த விசாலமான வழி

இயேசுவின் மரணம்வரைக்கும் இருந்த ஒரே வழியாக இருந்தது.




**e** இங்கு சிறிய எழுத்து **'e'- ஒரு தேசமாக இஸ்ரயேல் இருந்த தற்காலிக நீதிமானாக்கப்பட்ட நிலையைக் குறிக்கிறது.** இது யூத யுகம் என்றழைக்கப்படுகிற காலத்தில் வருடந்தோறும் அவர்கள் அனுசரித்த பாவநிவாரண நாளில் செலுத்தப்பட்ட 'காளை மற்றும் வெள்ளாட்டு கடா போன்ற... பலிகள்" மூலம் அவர்களுடைய பாவங்களுக்கு தேவனிடத்திலிருந்து ஒரு 'தற்காலிக" நீதிமானாக்கப்பட்ட நிலையைப் பெற்றார்கள். இந்த யுகத்தில் உலகில் உள்ள மற்ற தேசங்களைக் காட்டிலும், விசேஷமான தேசமாக இஸ்ரயேலை தேர்ந்தெடுத்து தேவன் விசேஷித்த ஆசீர்வாதங்களை அவர்களுக்குத் தந்தார்-


**ஆமோஸ் 3:2**

**"பூமியின் எல்லா வம்சங்களுக்குள்ளும் உங்களை மாத்திரம் அறிந்துகொண்டேன். ஆகையால் உங்களுடைய எல்லா அக்கிரமங்களினிமித்தமும் உங்களைத் தண்டிப்பேன்"**

ஆம். "நியாயப்பிரமாண உடன்படிக்கை மூலம்" இஸ்ரயேல் ஆசீர்வதிக்கப்பட்டிருந்தது. அநேக ஆசீர்வாதங்களை பெற்றிருந்தது- அவற்றில் தேவனுடைய குமாரன் யூதனாக பிறந்தது மிகப்பெரிய ஆசீர்வாதமாக வாசிக்கிறோம் -

**ரோமர் 9:4,5**

**"அவர்கள் இஸ்ரயேலரே, புத்திரசுவிகாரமும், மகிமையும், உடன்படிக்கைகளும், நியாயப்பிரமாணமும், தேவாராதனையும், வாக்குத்தத்தங்களும் அவர்களுடையவைகளே. பிதாக்கள் அவர்களுடையவர்களே, மாம்சத்தின்படி கிறிஸ்துவும் அவர்களில் பிறந்தாரே. இவர் என்றென்றைக்கும் ஸ்தோத்தரிக்கப்பட்ட சர்வத்திற்கும் மேலான தேவன் ஆமென்"**




**f** இங்கு சிறிய எழுத்து **'f' யூத யுகத்தின் முடிவில் இயேசுவின் ஞானஸ்நானம் மற்றும் அபிஷேகத்திற்கு பின்பு துவங்கிய - யூத யுக அறுவடையின் காலத்தைக் குறிக்கிறது.** இக்காலகட்டத்தில் "பதரிலிருந்து கோதுமை மணிகள்" பிரிக்கப்பட்டதாக வாசிக்கிறோம் -

**மத்தேயு 3:12**

**"தூற்றுக்கூடை அவர் கையில் இருக்கிறது. அவர் தமது களத்தை நன்றாய் விளக்கி, தமது கோதுமையைக் களஞ்சியத்தில் சேர்ப்பார். பதரையோ அவியாத அக்கினியினால் சுட்டெரிப்பார் என்றான்"**

இது பெயரளவில் யூதர்களாக இருந்தவர்களிடத்திலிருந்து உண்மையான யூதர்கள் பிரிக்கப்பட்டதை அடையாளப்படுத்துகிறது. மேலும் இதுசமயம் இஸ்ரயேலின்
பெயர் மத அமைப்புகள் புறக்கணிக்கப்பட்டதையும் வாசிக்கிறோம் -

**மத்தேயு 23:38**

**" இதோ,உங்கள் வீடு உங்களுக்குப் பாழாக்கிவிடப்படும்"**


மேலும் இந்த காலகட்டத்தின் முடிவில் கிபி 70ம் வருடம் இஸ்ரயேல் தேசம் அழிக்கப்பட்டது. இது பின்வரும் வசனத்தில் பதிவாகியிருக்கும் தீர்க்கதரிசனத்தின் நிறைவேறுதலாகும் -

**தானியேல் 9:26**

**"அந்த அறுபத்திரண்டு வாரங்களுக்குப் பின்பு மேசியா சங்கரிக்கப்படுவார். ஆனாலும் தமக்காக அல்ல, நகரத்தையும் பரிசுத்த ஸ்தலத்தையும் வரப்போகிற பிரபுவின் ஜனங்கள் அழித்துப்போடுவார்கள். அதின் முடிவு ஜலப்பிரவாகம்போல இருக்கும், முடிவுபரியந்தம் யுத்தமும் நாசமும் உண்டாக நியமிக்கப்பட்டது"**

இந்த அறுவடையில் பிரிக்கப்பட்ட "கோதுமை மணி" வகுப்பார் இயேசுகிறிஸ்துவின் சபையில் முதல் அங்கத்தினர் ஆனார்கள்.

**g** இங்கு சிறிய எழுத்து 'g' - **நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை அவருடைய ஞானஸ்நானத்தின்போது குறிக்கிறது**. கர்த்தர் தன்னுடைய ஞானஸ்நானத்தின்போது பரிசுத்தஆவியின் அபிஷேகத்தைப் பெற்று (மத்தேயு 3:16) ... பரிசுத்தஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்டு ஒரு 'புதிய சிருஷ்டியாகவும்" மாறினார்.





இதற்கு முன்புவரை ஒரு பரிபூரண மனுஷனாக இருந்தார். எனவே இங்கு சிறிய எழுத்து 'g' உண்மையில் "மனுஷனாகிய இயேசுகிறிஸ்து" அவருடைய ஞானஸ்நானத்தின்போது முப்பது வயது நிறைந்தவராக இருந்ததைக் குறிக்கிறது-

**லூக்கா 3:22,23**

**"பரிசுத்தஆவியானவர் ரூபகொண்டு புறாவைப்போல அவர்மேல் இறங்கினார். வானத்திலிருந்து ஒரு சத்தம் உண்டாகி - நீர் என்னுடைய நேச குமாரன், உம்மில் பிரியமாயிருக்கிறேன் என்று உரைத்தது. அப்பொழுது இயேசு ஏறக்குறைய**

முப்பது வயதுள்ளவரானார். அவர் யோசேப்பின் குமாரனென்று எண்ணப்பட்டார்"




**h** இங்கு சிறிய எழுத்து **'h'** - ஆவியினால் ஜெனிப்பிக்கப்பட்டு பிதாவின் சித்தம் செய்வதில் அனுதினமும் தன்னுடைய மாம்சத்தை **'ஜீவ பலியாக"** தன்னுடைய 3½ வருட ஊழியத்தில் அதாவது கிபி 29 முதல் கிபி 33 வரை **ஒப்புக்கொடுத்த புதிய சிருஷ்டியாகிய இயேசுவைக் குறிக்கிறது.**

**i** இங்கு சிறிய எழுத்து **'i' மூன்றாம் நாளில் தன்னுடைய உயிர்த்தெழுதலுக்கு பின்பு - ஆவியின் நிலையிலிருந்த இயேசுவையும் அவருடைய பிரசன்னத்தையும் குறிக்கிறது**. அவர் இந்த நிலையில் பூமியின்மீது நாற்பது நாட்கள் இருந்ததை வாசிக்கிறோம் -


**அப்போஸ்தலர் 1:3**

**"அவர் பாடுபட்டபின்பு நாற்பது நாளளவும் அப்போஸ்தலருக்குத் தரிசனமாகி, தேவனுடைய ராஜ்யத்துக்குரியவைகளை அவர்களுடனே பேசி, அநேகம் தெளிவான திருஷ்டாந்தங்களினாலே அவர்களுக்குத் தம்மை உயிரோடிருக்கிறவராகக் காண்பித்தார்"**

அவ்வேளையில் அவர் அப்போஸ்தலர்களுக்கும், சீஷர்களுக்கும் பதினோரு முறை காட்சியளித்தார். இதை அவர்தான் உயிர்த்தெழுந்து ஜீவனோடிருப்பதை நிரூபிக்கச் செய்தார். அந்த 40 நாட்களுக்குப் பின்பு அவர் பரலோகத்திற்கு ஏறினதை வாசிக்கிறோம் -

**அப்போஸ்தலர் 1:9**

**"அவர்கள் பார்த்துக்கொண்டிருக்கையில் உயர எடுத்துக்கொள்ளப்பட்டார். அவர்கள் கண்களுக்கு மறைவாக ஒரு மேகம் அவரை எடுத்துக்கொண்டது"**





**j** இங்கு சிறிய எழுத்து 'j' வரைபடத்தில் காணப்படவில்லை

**k** - இங்கு சிறிய எழுத்து **'k'** - **திவ்விய சுபாவத்தின் மகிமையிலிருக்கும் இயேசுவைக் குறிக்கிறது.** இது பின்வரும் தீர்க்கதரிசனத்தின் நிறைவேறுதலாகும். -

**யோவான் 5:26**

**“ஏனெனில் பிதாவானவர் தம்மில்தாமே ஜீவனுடையவராயிருக்கிறதுபோல, குமாரனும் தம்மில்தாமே ஜீவனுடையவராயிருக்கும்படி அருள்செய்திருக்கிறார்”**

l - இங்கு சிறிய எழுத்து ‘l’ - **சுவிசேஷயுகத்தில் சபையின்மீது கண்ணுக்குப் புலப்படாத தலையாக இருக்கிற இயேசுவைக் குறிக்கிறது** .




**மத்தேயு 28:20**

**“உலகத்தின் முடிவுபரியந்தம் சகலநாட்களிலும் நான் உங்களுடனேகூட இருக்கிறேன் என்றார்”**


இவர் சபைக்கு தலையாக இருந்து(எபேசியர் 1:22) சபையின் காரியங்கள் அனைத்தின்மீதும் கவனமுள்ளவராக பரலோகத்திலிருந்து வழிநடத்துவதை வாசிக்கிறோம் -

**வெளிப்படுத்தல் 1:13**

**“அந்த ஏழு குத்துவிளக்குகளின் மத்தியிலே, நிலையங்கி தரித்து மார்பருகே பொற்கச்சை கட்டியிருந்த மனுஷகுமாரனுக்கொப்பானவரையும் கண்டேன்”**

ஆம். அவர் “உன்னதமானவரின் வலது பாரிசத்தில்”(எபிரேயர்1:3) வீற்றிருக்கிறார்.

m இங்கு சிறிய எழுத்து‘m’ - **ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்ட தளத்தில்” இருக்கக்கூடிய இரண்டு பிரிவுகளில் பெரிய கூட்டத்தினராகிய - புத்தியில்லாத கன்னிகைகளை குறிக்கிறது** .




இவர்கள் ஆசரிப்புக் கூடாரத்தில் ‘போக்காடு” மூலமாக குறிக்கப்படுகிறார்கள். ‘புதிய சிருஷ்டிகளில்” இவ்வகுப்பார் ‘குமாரனுடைய சாயலுக்கு” ஒப்பான வளர்ச்சியை அடையாதவர்களும் .. தாங்கள் ஏற்படுத்தின உடன்படிக்கையை முழுமையாக நிறைவேற்ற தவறினவர்களுமாக இருந்தவர்கள் ஆவர் -

**லூக்கா 14:33**

**“அப்படியே உங்களில் எவனாகிலும் தனக்கு உண்டானவைகளையெல்லாம் வெறுத்துவிடாவிட்டால் அவன் எனக்குச் சீஷனாயிருக்கமாட்டான்”**


கிறிஸ்தவர்களில் இவ்வகுப்பார் பெந்தெகொஸ்தே நாள் முதல் அநேகர் இருக்கிறார்கள். ஆனாலும் இவ்வகுப்பாரில் அநேகர் கிறிஸ்துவின் சரீரம் நிறைவடைந்தபின்பு அதிக எண்ணிக்கையில் இருப்பார்கள்.

இவர்கள் அனைவரும் .."பெற்றுக்கொள்ளத்தக்கதாக" ஓடத் தவறினவர்களாக இருப்பதை வாசிக்கிறோம் -

**1கொரிந்தியர் 9:24**

**"பந்தயச் சாலையில் ஓடுகிறவர்களெல்லாரும் ஓடுவார்கள், ஆகிலும் ஒருவனே பந்தயத்தைப் பெறுவானென்று அறியீர்களா? நீங்கள் பெற்றுக்கொள்ளத்தக்கதாக ஓடுங்கள்"**

**n** இங்கு சிறிய எழுத்து 'n' **'ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்ட தளத்தில்" உள்ள இரண்டு பிரிவினர்களில் சிறியதாகிய - புத்தியுள்ள கன்னிகைகளைக் குறிக்கிறது.** இவர்களை கர்த்தர் "சிறுமந்தை" என்று பின்வரும் வசனத்தில் அழைக்கிறார் -




**லூக்கா 12:32**

**"பயப்படாதே சிறுமந்தையே, உங்களுக்கு ராஜ்யத்தைக் கொடுக்க உங்கள் பிதா பிரியமாயிருக்கிறார்"**

ஆம் இவர்கள் அவருடைய அடிச்சுவடுகளைப் பின்பற்றுபவர்கள் ஆவர். இவர்கள் ஆட்டுக்குட்டியானவர் எங்கே போனாலும் அவரைப் பின்பற்றுபவர்கள்" என்று பின்வரும் வசனத்தில் குறிப்பிடப்படுகிறார்கள் -

**வெளிப்படுத்தல் 14:4**


**"ஸ்திரீகளால் தங்களை கறைப்படுத்தாதவர்கள் இவர்களே. கற்புள்ளவர்கள் இவர்களே. ஆட்டுக்குட்டியானவர் எங்கே போனாலும்அவரைப் பின்பற்றுகிறவர்கள் இவர்களே. இவர்கள் மனுஷரிலிருந்து தேவனுக்கும் ஆட்டுக்குட்டியானவருக்கும் முதற்பலனாக மீட்டுக்கொள்ளப்பட்டவர்கள்"**

இவர்கள் தங்களுடைய "பலியின் உடன்படிக்கைக்கு" உண்மையுள்ளவர்களாக இருப்பதினால்-

**"அழைக்கப்பட்டவர்களும், தெரிந்துகொள்ளப்பட்டவர்களும், உண்மையுள்ளவர்களும்..."**

என்று அழைக்கப்படுகிறார்கள். இங்கு 'm' மற்றும் 'n' ஆகிய இரண்டு வகுப்பாரும் .. இயேசுகிறிஸ்துவின் சபையில் தெரிந்துகொள்ளப்பட்ட வகுப்பாராக இருக்கிறார்கள்.

**o** இங்கு சிறிய எழுத்து 'o' வரைபடத்தில் காணப்படுவதில்லை.




இங்கு சிறிய எழுத்து **'p'** - **இயேசுகிறிஸ்துவின் சபையில் முதலாவது வகுப்பாராகிய - 'அழைக்கப்பட்ட வகுப்பார் அல்லது விசுவாசிகளைக் குறிக்கிறது**. இவர்கள் அனைத்து பிரிவுகளிலும் காணப்படுகிற இயேசுகிறிஸ்துவின்மீது 'நம்பிக்கை" வைத்தவர்களாக இருந்து, ஆனால் சுயத்தை தியாகம் செய்வதில் அவரை'பின்பற்றாதவர்கள்" ஆவர்.

இவ்வகுப்பார் ஆசரிப்புக்கூடாரத்தின் 'நிழல்களில்" எப்பொழுதும் 'பிரகாரத்தில்" காணப்படுகிற 'லேவியர்கள்" மூலம் குறிப்பிடப்படுகிறார்கள். ஆம் கிறிஸ்தவர்களில் இந்த வகுப்பார் கர்த்தரை விசுவாசித்து... வேதம் வாசிக்கத் துவங்கி... பரிசுத்தமான வாழ்க்கை வாழ முயற்சிக்கின்றனர். இவர்களை நோக்கி அப்போஸ்தலனாகிய பவுல் கூறுவது என்னவெனில் -

**ரோமர் 12:1**

**"அப்படியிருக்க சகோதரரே, நீங்கள் உங்கள் சரீரங்களை பரிசுத்தமும் தேவனுக்குப் பிரியமுமான ஜீவபலியாக ஒப்புக்கொடுக்கவேண்டுமென்று, தேவனுடைய இரக்கங்களை முன்னிட்டு உங்களை வேண்டிக்கொள்கிறேன்.."**

இங்கு சகோதரரே என்பது இவர்கள் ஏற்கனவே கர்த்தரை விசுவாசிக்கிறவர்களாக இருப்பதைக் குறிக்கிறது. இவ்வகுப்பாரில் வெகுசிலர் கீழ்ப்படிந்து, அழைக்கப்பட்ட நிலையிலிருந்து தெரிந்துகொள்ளப்பட்ட நிலைக்கு முன்னேறுகிறார்கள்(மத்தேயு 22:14).

வெறும் "விசுவாசத்தை" மட்டுமே கொண்ட இவ்வகுப்பார், பரலோக வாய்ப்பை சுதந்தரிப்பதற்கான வாக்குத்தத்தம் ஏதும் இல்லாதவர்கள். ஏனெனில் பரலோக ஜீவனை பெற்றுக்கொள்வதற்கு அடிப்படையாக கருதப்படுகிற ஆவியினால் ஜெநிப்பிக்கப்படுவதும், "புதிய சிருஷ்டிகளாக" மாறுவதுமே.. என்று இயேசுவின் வார்த்தைகளில் பதிவாகியிருப்பதை இவர்கள் அடையாமல் இருக்கிறார்கள் -


**யோவான் 3:3**

**"இயேசு அவனுக்குப் பிரதியுத்தரமாக - ஒருவன் மறுபடியும் பிறவாவிட்டால் தேவனுடைய ராஜ்யத்தைக் காணமாட்டான் என்று மெய்யாகவே மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன் என்றார்"**

இவர்கள் இயேசுவின் மீதான விசுவாசத்தினால் "தற்காலிக" நீதிமானாக்கப்பட்ட நிலையில் இருக்கிறார்கள்.

இவர்கள் அனைவரும் இயேசுவின்மேல் உள்ள விசுவாசத்தினால் நீதிமானாக்கப்பட்ட நிலைமையில் இருப்பதாக கருதப்படுவார்கள்(ரோமர் 5:1)

q இங்கு சிறிய எழுத்து'**q**' - **சபையிலிருக்கிற ஒரு விநோதமான வகுப்பாராகிய அவிசுவாசிகளையும், மாயக்காரரையும் குறிக்கிறது.** இவ்வகுப்பார், கிறிஸ்தவ குடும்பங்களில் பிறந்ததினால் , பெயரளவில் கிறிஸ்தவர்கள் என்றழைக்கப்பட்டு, கல்வாரி சிலுவையில் இயேசுவின் மீட்பு பணியை நம்பாமலும், விசுவாசியாமலும் இருக்கிறார்கள்.




இவர்களுக்கு சிலுவை மற்றும் அதன் உபதேசங்கள் 'முட்டாள்தனமாக"இருப்பதை வாசிக்கிறோம் -


**1கொரிந்தியர் 1:18**

**"சிலுவையைப் பற்றிய உபதேசம் கெட்டுப்போகிறவர்களுக்குப் பைத்தியமாயிருக்கிறது. இரட்சிக்கப்படுகிற நமக்கோ அது தேவ பெலனாயிருக்கிறது"**

இவர்கள் விசுவாசியாமல் போவதினால் நீதிமானாக்கப்படுவதில்லை. அறிவியலும் அறிவும் பெருகிப்போயிருக்கிற இன்றைய உலகத்தின் சபைகளில் இவ்வகுப்பாரின் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டிருக்கிறது.

r இங்கு சிறிய எழுத்து '**r**' - **கர்த்தருடைய இரண்டாம் பிரசன்னத்தைக் குறிக்கிறது**

வேத வசனங்கள் இதை மாம்ச கண்களுக்கு புலப்படாத விசுவாச கண்களாகிய 'புரிந்து கொள்ளுதலின் கண்களுக்கு" மாத்திரமே 'இரவில் திருடன் வருகிற விதமாய்" துவங்குகிற அவருடைய பிரசன்னம் அறியமுடியும் என்பதை வாசிக்கிறோம் -




**1தெசலோனிக்கேயர் 5:2**

**"இரவிலே திருடன் வருகிற விதமாய்க் கர்த்தருடைய நாள் வருமென்று நீங்களே நன்றாய் அறிந்திருக்கிறீர்கள்"**

ஆம். அவருடைய இரண்டாம் பிரசன்னம் இரகசியமாகவும், யாரும் அறியாத வண்ணமும் இருக்கும் என்பதை இவ்வசனம் வெளிப்படுத்துகிறது. அவர் திவ்விய சுபாவத்தில் இருக்கிறபடியால் அவருடைய இரண்டாம் பிரசன்னமானது - **'பரோஷியா, எபிபானியா, அப்போகலிப்சிஸ்"** என்ற மூன்று நிலைகளில் 'வெளியாக்கப்படுகிறது". இந்த பிரசன்னம் 1874 அக்டோபரில் துவங்கி.. வெளிப்படுத்தல் 1:7ல் கூறப்பட்ட வார்த்தைகள் நிறைவேறுகிற 2874வரை தொடர்கிறது -

**வெளிப்படுத்தல் 1: 7**

**"இதோ மேகங்களுடனே வருகிறார். கண்கள் யாவும் அவரைக் காணும், அவரைக் குத்தினவர்களும் அவரைக் காண்பார்கள். பூமியின் கோத்திரத்தாரெல்லாரும் அவரைப் பார்த்துப் புலம்புவார்கள்"**

சிறிய எழுத்து r என்பதை வேறொரு வகையிலும் புரிந்துகொள்ளலாம். அது 'கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள்" முதலாவது எழுந்திருப்பதைக் குறிக்கிறது. கிறிஸ்துவின் சரீர வகுப்பாராகிய இவர்களைக் குறித்து வாசிக்கையில் -

**1தெசலோனிக்கேயர் 4:16**

**"ஏனெனில், கர்த்தர் தாமே ஆரவாரத்தோடும் பிரதான தூதனுடைய சத்தத்தோடும், தேவ எக்காளத்தோடும் வானத்திலிருந்து இறங்கிவருவார், அப்பொழுது கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் முதலாவது எழுந்திருப்பார்கள்"**

மகிமையான சரீரத்தில் இந்த பாகத்தினர், பெந்தெகொஸ்தே நாள் முதல் 1878 ஏப்ரல் வரை நித்திரையடைந்தவர்கள் ஆவர். இவ்வகுப்பாரின் உயிர்த்தெழுதலைக் குறித்து வாசிக்கையில் -

**1கொரிந்தியர் 15:52**

**"எக்காளம் தொனிக்கும். அப்பொழுது மரித்தோர் அழிவில்லாதவர்களாய் எழுந்திருப்பார்கள். நாமும் மறுரூபமாக்கப்படுவோம்"**

இவர்களுடைய எண்ணிக்கை 1,44,000 அல்ல. மாறாக அதில் ஒரு பகுதி மாத்திரமே. அதில் 12 அப்போஸ்தலர்கள் அடங்குவர்.

சிறிய எழுத்து r தன்னுடைய இரண்டாம் வருகையில் வந்த இயேசு என்றும்... 1878ல் முதலாவது உயிர்த்தெழுந்த அவருடைய சரீரத்தில் ஒரு பாகமும் என்று நாம் கூறுவதன் காரணம் பின்வரும் வசனத்தில் காணப்படுகிறது -

**யோவான் 14:3**


**"நான் போய் உங்களுக்காக ஸ்தலத்தை ஆயத்தம் பண்ணினபின்பு, நான் இருக்கிற இடத்திலே நீங்களும் இருக்கும்படி, நான் மறுபடியும் வந்து உங்களை என்னிடத்தில் சேர்த்துக்கொள்ளுவேன்"**

ஆம். இவர்கள் கிறிஸ்துவின் மகிமையான சரீரத்தில் ஒரு பாகமாகி, நியாயத்தீர்ப்பு, திரும்பக்கொடுத்தல் மற்றும் ஆளுகையில் இயேசுவோடு இருப்பதாக எண்ணப்படுகிறார்கள். இவ்விதமான ஒருமைப்பாட்டில் இருப்பது, பின்வரும் வசனத்தில் அருமையாக காண்பிக்கப்பட்டிருக்கிறது -

**1தெசலோனிக்கேயர் 4:17**

**"இவ்விதமாய் எப்பொழுதும் கர்த்தருடனேகூட இருப்போம்"**

S இங்கு சிறிய எழுத்து **'s' - பாபிலோனிலிருந்து பிரிக்கப்படுகிற.. சிறுமந்தையின் அங்கத்தினரை குறிக்கிறது.** இது 1874ம் வருடத்திற்கு பின்பு சுவிசேஷயுக அறுவடையில் நடக்கிறது. இவ்வகுப்பார் கிறிஸ்துவின் சரீரத்தில், 'பின்பு உயிரோடிருக்கிற நாமும்"




என்றழைக்கப்படுகிற வகுப்பாரைக் குறிக்கிறார்கள் (1தெசலோனிக் 4:17).

இவ்வகுப்பாரைக் குறித்து அப்போஸ்தலனாகிய பவுல் கூறுகையில் -

அவர்கள் “நித்திரையடையாமல்” தங்களுடைய மரணத்தின்போது ஒரு நொடிப்பொழுதில் “மறுரூபமாக்கப்படுவார்கள்” என கூறப்படுகிறது(1கொரிந்தியர் 15:51)

இது எதைக் குறிக்கிறது? இதன் பொருள் என்னவெனில், “சரீரத்தில்” இந்த வகுப்பாருடைய மரண தருணம் ஒரு’ஆச்சரியமாக” இருக்கும் என்றும், அப்பொழுது அவர்கள் “ஒரு நொடிப்பொழுதில்” முதலாம் உயிர்த்தெழுதலை பெற்றுக்கொள்வார்கள் என்றும் வாசிக்கிறோம்(1கொரிந்தியர் 15:54).

இவ்வகுப்பார் உண்மையில் “ஆசீர்வதிக்கப்பட்டவர்கள்” என்று வாசிக்கிறோம் -


**வெளிப்படுத்தல் 14:13**

**“பின்பு, பரலோகத்திலிருந்து ஒரு சத்தம் உண்டாகக்கேட்டேன். அது கர்த்தருக்குள் மரிக்கிறவர்கள் இது முதல் பாக்கியவான்கள் என்றெழுது. அவர்கள் தங்கள் பிரயாசங்களை விட்டொழிந்து இளைப்பாறுவார்கள். அவர்களுடைய கிரியைகள் அவர்களோடே கூடப்போம்”**

இங்கு “இது முதற்கொண்டு” என்பது.. 1878க்கு பின்னான காலத்தைக் குறிக்கிறது. ஏனெனில் 1878ஏப்ரல் மாதத்திற்கு பின் இந்த முதலாம் உயிர்த்தெழுதல் நிறைவேறிக்கொண்டிருக்கிறது. இவ்வகுப்பார் - ‘பாத அங்கங்கள்” என்றழைக்கப்பட்டு பின்வருமாறு குறிப்பிடப்படுகிறார்கள் -

**ஏசாயா 52:7**

**“சமாதானத்தைக் கூறி, நற்காரியங்களை சுவிசேஷமாய் அறிவித்து, இரட்சிப்பைப் பிரசித்தப்படுத்தி, உன் தேவன் ராஜரீகம் பண்ணுகிறாரென்று சீயோனுக்குச் சொல்லுகிற சுவிசேஷகனுடைய பாதங்கள் மலைகளின்மேல் எவ்வளவு அழகாயிருக்கின்றன”**




ஆம் இவர்கள் கிறிஸ்துவின் சரீரத்தில் ஆசீர்வதிக்கப்பட்ட அங்கங்களாக இருந்து, அவருடைய இரண்டாம் வருகையின் காலத்திற்குள்ளாக மாம்சத்தில் வாழ்கிறவர்கள்.

t இங்கு சிறிய எழுத்து **‘t’** - **‘கிறிஸ்துவின்**

**சரீரம்" நிறைவடைந்ததற்கு பின்பு வாழ்கிற ஒப்புக்கொடுத்தவர்களைக் குறிக்கிறது. இவர்கள் திரள் கூட்டத்தினர் என்றழைக்கப்படுகிற கடைசி அங்கத்தினர் ஆவார்.** இவ்வகுப்பாரின் மனநிலையானது பின்வருமாறு குறிப்பிடப்படுகிறது

**எரேமியா 8:20**

**"அறுப்புக்காலம் சென்றது,கோடைக்காலமும் முடிந்தது, நாமோ இரட்சிக்கப்படவில்லை"**

ஆம். இவர்கள் உலகத்தின்மீது சம்பவிக்கும் "மகா உபத்திரவக் காலத்தில்" பெரிய உபத்திரவத்திற்குள் அனுமதிக்கப்படுவதை வாசிக்கிறோம் -

**வெளிப்படுத்தல் 7:14**

**"அதற்கு நான் - ஆண்டவனே, அது உமக்கேதெரியும் என்றேன். அப்பொழுது அவன் - இவர்கள் மிகுந்த உபத்திரவத்திலிருந்து வந்தவர்கள். இவர்கள் தங்கள் அங்கிகளை ஆட்டுக்குட்டியானவருடைய இரத்தத்திலே தோய்த்து வெளுத்தவர்கள்"**

அதற்கு பின்பு இவர்கள் தேவனுக்கும் அவருடைய இராஜ்யத்திற்கும் மிகப்பெரிய சாட்சியை ஏறெடுப்பதை வாசிக்கிறோம் -

**வெளிப்படுத்தல் 19:6**


**"அப்பொழுது திரளான ஜனங்கள் இடும் ஆரவாரம்போலவும், பெருவெள்ள இரைச்சல்போலவும், பலத்த இடிமுழக்கம்போலவும் ஒரு சத்தமுண்டாகி, அல்லேலூயா, சர்வவல்லமையுள்ள தேவனாகிய கர்த்தர் ராஜ்யபாரம் பண்ணுகிறார்"**

அதற்குப் பின்பு இவர்கள்... கிறிஸ்துவின் "மணவாட்டியாகிய" அல்லது கிறிஸ்துவின் சரீரத்தை 'தொடர்ந்து", பரலோகத்திற்கு "இரண்டாம் உயிர்த்தெழுதலின்" மூலம் செல்வதை தீர்க்கதரிசனத்தில் வாசிக்கிறோம் -

**சங்கீதம் 45:14**

**"சித்திரத் தையலாடை தரித்தவளாய், ராஜாவினிடத்தில் அழைத்துக்கொண்டு வரப்படுவாள், அவள் பின்னாலே செல்லும் அவளுடைய தோழிகளாகிய கன்னிகைகள் உம்மிடத்தில் கூட்டிக்கொண்டு வரப்படுவார்கள்"**

**U & V** இங்கு சிறிய எழுத்து**'U மற்றும் V' - நியாயத்தீர்ப்புக்குள்ளாகும் பெயர்சபை அமைப்புகளை குறிக்கிறது.** விசுவாசிகள்(U) மற்றும் மாயக்காரர்களை(V) தன்னுடைய அங்கத்தினர்களாக கொண்டுள்ள பெயர்சபை அமைப்பானது அழிக்கப்பட்டு, தன் கள்ள விசுவாசங்கள் மற்றும் போதனைகள் அனைத்தும் மகா உபத்திரவத்தில் வெளிப்படுவதன்மூலம் இந்த அமைப்பிற்கு நேரிடுவதை வாசிக்கிறோம் -




**1கொரிந்தியர்3:12**

"ஒருவன் அந்த அஸ்திவாரத்தின்மேல் பொன், வெள்ளி, விலையேறப்பெற்ற கல்"

போன்றவைகளுக்கு எதிர்மாறாக இருக்கிற அசத்தியத்தைக் குறிக்கிறது. இந்த அமைப்புகளனைத்தையும், வேத வசனங்கள் "பாபிலோன்" என்றழைக்கிறது -

இதற்கு.. உபதேசங்களினால் உண்டான குழப்பம் என்று பொருள்.

இவைகள் அந்திக்கிறிஸ்துவின் அமைப்புகளாக இருந்து, கர்த்தருடைய இரண்டாம் வருகைக்கு பின்வரும் காலகட்டத்தில் அழிக்கப்படுவதை வாசிக்கிறோம் -

**2தெசலோனிக்கேயர் 2: 8**


**" நீக்கப்படும்போது, அந்த அக்கிரமக்காரன் வெளிப்படுவான், அவனைக் கர்த்தர் தம்முடைய வாயின் சுவாசத்தினாலே அழித்து, தம்முடைய வருகையின் பிரசன்னத்தினாலே நாசம்பண்ணுவார்"**

அந்த அமைப்பிலுள்ள அனைத்து ஜனங்களும் அதன் பயங்கரமானஅழிவைக் காண்பார்கள் என்று வாசிக்கிறோம் -

**வெளிப்படுத்தல் 14:9,10**

**"அவர்களுக்குப் பின்னே மூன்றாம் தூதன் வந்து, மிகுந்த சத்தமிட்டு -மிருகத்தையும் அதின் சொருபத்தையும் தன் நெற்றியிலாவது தன் கையிலாவது அதின் முத்திரையைத் தரித்துக்கொள்ளுகிறவனெவனோ, அவன் தேவனுடைய கோபாக்கினை -யாகிய பாத்திரத்திலே கலப்பில்லாமல் வார்க்கப்பட்ட அவருடைய உக்கிரமாகிய மதுவைக் குடித்து, பரிசுத்த தூதர்களுக்கு முன்பாகவும், ஆட்டுக்குட்டியானவருக்கு முன்பாகவும் அக்கினியினாலும் கந்தகத்தினாலும் வாதிக்கப்படுவான்"**

இங்கு சிறிய எழுத்து **'W' - கிறிஸ்துவோடுகூட மகிமையடைந்த முழு சபையைக் குறிக்கிறது.** இந்த கிறிஸ்துவின் சரீரம் நிறைவடைவதும்,அதின் 1,44,000 அங்கங்களும் முழுமையாக மகிமையடைவதும் மகா உபத்திரவக் காலத்திற்கு" சற்று முன்பதாக நிறைவேறுவதை நாம் வாசிக்கிறோம் -




**மல்கியா 3:17**


**"என் சம்பத்தை சேர்க்கும் நாளிலே அவர்கள் என்னுடையவர்களாயிருப்பார்கள் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார். இரு மனுஷன் தனக்கு ஊழியஞ்செய்கிற தன்னுடைய குமாரனைக் கடாட்சிக்கிறதுபோல நான் அவர்களைக் கடாட்சிப்பேன்"**

இவ்விதமாக முழுவதும் மகிமையடைந்த சபை திரைக்கு அப்பாலிருந்து பெயர்சபை அமைப்புகளின் நியாயத்தீர்ப்பை காண்பார்கள் (வெளிப்படுத்தல் 14:10). அப்பொழுது இராஜாவாகிய கர்த்தர் இயேசுவோடு , முழுமையாக மகிமையடைந்த சபை.. இஸ்ரயேலில் தேவனுடைய இராஜ்யத்தில்

"கண்ணுக்குத் தெரிகிற" விதத்தில் வெளிப்படுவார்கள் என்று பின்வரும் வசனத்தில் வாசிக்கிறோம்

**மல்கியா 4:2**

**"ஆனாலும் என் நாமத்துக்குப் பயந்திருக்கிற உங்கள்மேல் நீதியின் சூரியன் உதிக்கும்.**
**அதின் செட்டைகளின்கீழ் ஆரோக்கியம் இருக்கும்.**
**நீங்கள் வெளியே புறப்பட்டுப்போய், கொழுத்த கன்றுகளைப்போல வளருவீர்கள்"**





**X** இங்கு சிறிய எழுத்து **'x' - இராஜ்யத்தின் ஆவிக்குரிய பாகத்தின் அரசாட்சி அல்லது சீயோனைக் குறிக்கிறது** இதுவே கிறிஸ்துவின் இராஜ்யத்தின் வல்லமை, அதிகாரம் மற்றும் ஆளுகை என்பதை வாசிக்கிறோம் -

**தானியேல் 7:14,27**

**"சகல ஜனங்களும் ஜாதியாரும், பாஷைக்காரரும்**
**அவரையே சேவிக்கும்படி, அவருக்குக் கர்த்தத்துவமும்**
**மகிமையும் ராஜரீகமும் கொடுக்கப்பட்டது.**
**அவருடைய கர்த்தத்துவம் நீங்காத நித்திய**
**கர்த்தத்துவமும்,**
**அவருடைய ராஜ்யம் அழியாததுமாயிருக்கும்"**
**"வானத்தின் கீழெங்குமுள்ள ராஜ்யங்களின் ராஜரீகமும் ஆளுகையும் மகத்துவமும்**
**உன்னதமானவருடைய பரிசுத்தவான்களாகிய ஜனங்களுக்குக்கொடுக்கப்படும்,**
**அவருடைய ராஜ்யம் நித்திய ராஜ்யம், சகல கர்த்தத்துவங்களும் அவரைச் சேவித்து,**
**அவருக்குக் கீழ்ப்பட்டிருக்கும் என்றான்"**

மூன்றாம் உலகத்தின் ஆவிக்குரிய அரசாங்கத்தை - "புதிய(பரிசுத்த) எருசலேம்" என்று குறிப்பிடப்படுகிறது(வெளிப்படுத்தல் 21:10) ஆம். "சீயோன்" பூமியின் மீதான தன்னுடைய கண்ணுக்குத் தெரியாத ஆளுகையை ஆயிர வருடத்தின் முடிவு வருடமாகிய 2874வரை தொடரும்.




**y** இங்கு சிறிய எழுத்து **'y' - சீயோனுக்கு ஊழியக்காரர்களாக இருக்கும் திரள்கூட்டத்தினரைக் குறிக்கிறார்கள்.** இவர்கள் ஆவிக்குரிய சரீரத்தை (தூதர்களுக்கு ஒப்பான) பெற்றிருந்து அழியக்கூடிய நிலையிலிருந்து தேவனுடைய இராஜ்யத்தின் பரத்திற்குரிய மற்றும் பூமிக்குரிய பாகங்களுக்கு இடையில் ஆவிக்குரிய ஊழியர்களாக இருப்பதை நாம் வாசிக்கிறோம் -


**வெளிப்படுத்தல் 7:15**

**"ஆனபடியால் இவர்கள் தேவனுடைய சிங்காசனத்திற்கு**
**முன்பாக இருந்து, இரவும் பகலும் அவருடைய**

**ஆலயத்திலே அவரைச் சேவிக்கிறார்கள். சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கிறவர் இவர்களுக்குள்ளே வாசமாயிருப்பார்"**

ஆம். இவர்கள் கிறிஸ்துவின் இராஜ்யத்தில் ஆவிக்குரிய தளத்திலிருக்கிற ஊழியக்காரர் ஆவர்.

இங்கு சிறிய எழுத்து **'Z' - தேவனுடைய இராஜ்யத்தின் பூமிக்குரிய இராஜ்யத்தைக் குறிக்கிறது**. இது 'பூமியின்மீது பிரபுக்களான" முற்பிதாக்களையும் அவர்களுக்கு இந்த மாபெரும் வேலையில் உதவியாக இருக்கும்படி சீர்பொருத்தப்பட்ட இஸ்ரயேல் தேசத்தையும் உள்ளடக்கியிருப்பதை வாசிக்கிறோம்




**சகரியா8:23**

**"அந்நாட்களில் பலவித பாஷைக்காரராகிய புறஜாதியாரில் பத்து மனுஷர் ஒரு யூதனுடைய வஸ்திரத்தொங்கலைப் பிடித்துக்கொண்டு, தேவன் உங்களோடே இருக்கிறார் என்று கேள்விப்பட்டோம்"**

இவர்கள் சபையிடமிருந்து பெறப்படும் கட்டளைகளை நிறைவேற்றி இராஜ்யத்தை ஆளுவார்கள் (ஏசாயா 2:3).

இவ்விதமாக சீர்பொருந்தப்பட்ட இஸ்ரயேல் தேசம் எசேக்கியேல் 37:10ல் காணப்படுகிற "உலர்ந்த எலும்புகளின்" தீர்க்கதரிசனத்தில் "பலத்தசேனையாக" குறிப்பிடப்பட்டிருக்கிறது. உண்மையாகவே எல்லா தேசங்களும் மரித்தவர்களிலிருந்து திரும்பி வருகிற சந்ததிகள் அனைத்தும் கர்த்தரை தேடுவார்கள் என்று வாசிக்கிறோம் -

**சங்கீதம் 22:27,28**

**"பூமியின் எல்லைகளெல்லாம் நினைவுகூர்ந்து கர்த்தரிடத்தில் திரும்பும், ஜாதிகளுடைய சந்ததிகளெல்லாம் உமது சமுகத்தில் தொழுதுகொள்ளும். ராஜ்யம் கர்த்தருடையது, அவர் ஜாதிகளை ஆளுகிறவர்"**

முற்பிதாக்களுக்கு கீழ்ப்பட்டு நடக்கிற இஸ்ரயேலரின் ஆசீர்வதிக்கப்பட்ட வேலையானது. முழுமையாயும், திருப்தியாயும் இருக்கும் என்று வாசிக்கிறோம் -

**தானியேல் 12:3**

**" ஞானவான்கள் ஆகாயமண்டலத்தின் ஒளியைப்போலவும், அநேகரை நீதிக்குட்படுத்துகிறவர்கள் நட்சத்திரங்களைப்போலவும் என்றென்றைக்குமுள்ள சதாகாலங்களிலும் பிரகாசிப்பார்கள்"**

மேற்கண்டவைகளே, சிறிய எழுத்துக்கள் முதல் வரையிலானவைகளின் விளக்கமாகும்.

**இப்பொழுது நாம் வரைபடத்திலுள்ள எண்களைப் பார்ப்போம்**

## எண்கள் 1 முதல் 11 வரை

இந்த எண்கள் அனைத்தும் தேவனுடைய மாபெரும் தெய்வீகத்திட்டத்தில் **'உலகத்தோற்றத்திற்குமுன்" அவர் நியமித்திருக்கிற சில முக்கியமான காலங்களையும் வேளைகளையும் குறிக்கிறது.** இதைக்குறித்த ஆராய்ச்சியானது, தேவன் காலங்களுக்கும் வேளைகளுக்கும் தேவனாக இருக்கிறார் என்பதையும், 'காலங்கள் நிறைவேறும்போது அவருடைய திட்டம் நிறைவேறும் என்பதையும் காண்பிக்கிறது . இப்பொழுது அந்த காலங்களையும் வருடங்களையும் காண்போம் -

**1** இங்கு எண் '1" - ஒரு உலகம் முடிவுக்கு வந்து.. மற்றொரு உலகம் துவங்கிய சமயத்தில் சம்பவித்த ஒரு நிகழ்ச்சியைக் குறிக்கிறது. **அது ஜலப்பிரளயம் துவங்கின நாளாகும்.**




இது வேத வசனங்களில் தெளிவாக பதிவாகியிருப்பதை வாசிக்கிறோம் -


**ஆதியாகமம் 7:11**

**"நோவாவுக்கு அறுநூறாம் வயதாகும் வருஷம் இரண்டாம் மாதம் பதினேழாம் தேதியாகிய அந்நாளிலே, மகா ஆழத்தின் ஊற்றுக்கண்களெல்லாம் பிளந்தன. வானத்தின் மதகுகளும் திறவுண்டன"**

இந்த வருடம் பின்வருமாறு கணக்கிடப்படுகிறது -

| | | | | |
|---|---|---|---|---|
| **4128** | **-** | **1656** | **=** | **கிமு 2472** |
| (ஆதாம் சிருஷ்டிக்கப்பட்ட வருடம்) | | (முதலாம் உலகத்தின் காலப்பகுதி) | | |

**2** இங்கு எண் **'2" என்பது ஒரு யூத யுகத்தின் துவக்கத்தைக் குறிக்கிற ஒரு நிகழ்வாகும்.** அவ்வருடம் கிமு 1812 ஆகும். மேலும் இது முற்பிதாக்களில் கடைசியாளவராகிய யாக்கோபு மரித்த வருடமும் அதன்மூலம் முற்பிதாக்கள் யுகத்தின் முடிவாகவும் இருக்கிறது.





**3** இங்கு எண் **'3" இயேசுவின் ஞானஸ்நான வருடத்தைக் குறிக்கிறது.** இது கிமு 29ல் சம்பவித்தது. அப்பொழுது இயேசு 30 வயது நிரம்பியவராக இருந்தார். இவ்வருடமானது தானியேல் 9ம் அதிகாரத்தில் காணப்படுகிற '70 வாரங்கள்" பற்றின தீர்க்கதரிசனத்தில் கணக்கிடப்படுகிறது.

**4** இங்கு எண் **'4"(சிலுவை) - இயேசு மரித்த வருடத்தைக் காண்பிக்கிறது .** இது தன்னுடைய ஞானஸ்நானத்திற்கு பின் $3^{1/2}$ வருடம் கழித்து.. கிபி 33 ஏப்ரல்

3, வெள்ளிக்கிழமை அன்று சம்பவித்தது. இது அந்த வருடம் ஒரு வெள்ளிக்கிழமையன்று சம்பவித்ததால், "புனித வெள்ளி" என்பதற்கான முக்கியத்துவம் பெற்றது.

**5** இங்கு எண் **'5"** - யூதர்களுக்கு ஆசீர்வாதமாக அனுமதிக்கப்பட்ட 70 வாரங்களின் முடிவைக் குறிக்கிறது. **அதுசமயம் சுவிசேஷயுக 'அழைப்பு" புறஜாதிகளுக்கு செல்ல ஆரம்பித்தது.** இந்த வாய்ப்பில் நூற்றுக்கு அதிபதியான கொர்நேலியுவும், அவருடைய குடும்பத்தாரும் முதல் புறஜாதிகளாக இருந்ததை வாசிக்கிறோம் -




**அப்போஸ்தலர் 10:24,44**

**"மறுநாளிலே செசரியா பட்டணத்தில் பிரவேசித்தார்கள். கொர்நேலியு தன் உறவின் முறையாரையும் தன்னுடைய விசேஷித்த சிநேகிதரையும் கூடவரவழைத்து, அவர்களுக்காகக் காத்திருந்தான். இந்த வார்த்தைகளைப் பேதுரு பேசிக்கொண்டிருக்கையில் வசனத்தைக் கேட்டவர்கள் யாவர்மேலும் பரிசுத்தஆவியானவர் இறங்கினார்"**

ஆம். இது இயேசுவின் மரணத்திற்கு பின்பு 31/2 வருடம் கழித்து கிபி 36 அக்டோபர் மாதம் சம்பவித்தது.

**6** இங்கு எண் **'6" - எருசலேமின் அழிவைக் குறிக்கிறது**. இது ரோம தளபதியாகிய தீத்து ராயன் படையெடுப்பின்பொது.. எருசலேம் அழிக்கப்பட்டு அதன்மூலம் நியாயத்தீர்ப்பும் தானியேல் புத்தகத்தின் தீர்க்கதரிசனமும் நிறைவேறியதை வாசிக்கிறோம் -

**தானியேல் 9:26**

**"அந்த அறுபத்திரண்டு வாரங்களுக்குப் பின்பு மேசியா சங்கரிக்கப்படுவார். ஆனாலும் தமக்காக அல்ல, நகரத்தையும் பரிசுத்த ஸ்தலத்தையும் வரப்போகிற பிரபுவின் ஜனங்கள் அழித்துப்போடுவார்கள். அதின் முடிவு ஜலப்பிரவாகம்போல இருக்கும். முடிவுபரியந்தம் யுத்தமும் நாசமும் உண்டாக நியமிக்கப்பட்டது"**

இது கிபி 70ம் வருடம் சம்பவித்தது.

**7** இந்த எண் **'7" என்பது நமது ஆண்டவரின் இரண்டாம் வருகையாகும்**. இது பின்வரும் தீர்க்கதரிசனத்தின் நிறைவேறுதலாகும் -


**தானியேல் 12:12**

**"ஆயிரத்து முந்நூற்று முப்பத்தைந்து நாள் மட்டும்**

**காத்திருந்து சேருகிறவன் பாக்கியவான்"**

ஆம். இது "1335 நாட்களின்" முடிவில் சம்பவிக்கிற "ஆசீர்வாதமான"சம்பவமாகும். இது 1874ம் வருடம் அக்டோபர் மாதம் சம்பவித்தது.

**8** இங்கு எண் **'8" என்ற இந்தக்கோடு மத்தியிலிருக்கிறது. அது 'கிறிஸ்துவுக்குள் மரித்தவர்களின்" முதலாம் உயிர்த்தெழுதலின் வருடத்தை குறிக்கிறது** (1தெசலோனிக்கேயர் 4:16). இது இரண்டாம் வருகைக்கு பின்பு $3^{1/2}$ வருடம் கழித்து சம்பவித்தது.




இது மேசியாவின் முதலாம் வருகைக்கும்(இயேசுவின் ஞானஸ்நானம்) $3^{1/2}$ வருடம் கழித்து.. சபைக்கு தலையாக.. அவருடைய உயிர்த்தெழுதலுக்கும்.. இடையிலான காலப்பகுதியின்மூலம் காண்பிக்கப்பட்டுள்ளது.

**அக்டோபர் 1874 + 3½ --- ஏப்ரல் 1878**

இந்த நாளில் (அல்லது வருடத்தில்) முதலாம் உயிர்த்தெழுதல் துவங்கி.. இன்றுவரை தொடர்ந்துகொண்டிருக்கிறது.

**9** இங்கு எண் **'9" என்பது சபை நிறைவடைகிற வருடமாகும்.** இது சரீரமாகிய 1,44,000 அங்கத்தினரும் முழுமையாக மகிமையடைவதாகும். இந்த வருடம் இன்னும் எதிர்காலத்தில் இருக்கக்கூடிய வருடமாகும்.

இந்த வருடத்தை நாம் முன்னதாக அறிந்துகொள்ளமுடியுமா? இதற்கான பதில் -

**ஆமோஸ் 3: 7**

***"கர்த்தராகிய ஆண்டவர் தீர்க்கதரிசிகளாகிய தம்முடைய ஊழியக்காரருக்குத் தமது இரகசியத்தை வெளிப்படுத்தாமல் ஒரு காரியத்தையும் செய்யார்"***

மேலும் ஏசாயா 42:9 ஐயும் வாசிக்கையில், அந்த வருடத்தை சபை வகுப்பார் முன்னதாகவே அறிந்துகொள்ளும் வாய்ப்பு இருப்பதைக் காண்கிறோம். 'ஏற்ற சமயத்தில்" தேவனுடைய வெளிப்படுத்தலுக்கு நாம் காத்திருப்போம்.

**10** இங்கு எண் **'10" என்பது இஸ்ரயேலில் கண்ணுக்குத் தெரிகிற இராஜ்யம் ஸ்தாபிக்கப்படுகிற வருடமாகும்.**

இது இரண்டாம் உலகத்தையும், "மகா உபத்திரவக் காலத்தையும்"... "யாக்கோபின் இக்கட்டு காலத்தையும்" முடிவுக்கு கொண்டுவருகிற புள்ளி புள்ளியான கோட்டின்மூலம் காண்பிக்கப்படுகிறது


-

**மத்தேயு 24:22**

**"அந்நாட்கள் குறைக்கப்படாதிருந்தால் , ஒருவனாகிலும் தப்பிப்போவதில்லை. தெரிந்துகொள்ளப்பட்டவர்களினிமித்தமோ அந்த நாட்கள் குறைக்கப்படும்"**

இந்த வருடம்கூட இன்னும் எதிர்காலத்திலே சம்பவிப்பதாக இருக்கிறது.

**11** இங்கு எண் **'11" என்பது ஆயிரவருட இராஜ்யத்தின் முடிவு வருடத்தைக் குறிக்கிறது.**




இது 1874ம்வருடம் அக்டோபர் மாதம் துவங்கிய கிறிஸ்துவின் இராஜ்யத்தின் 1000 வருடத்தின் முடிவாகும். இந்த வருடம் பின்வருமாறு கணக்கிடப்படுகிறது -

**1874 + 1000 = 2874**

இதற்கு சற்று பின்பு 'கொஞ்ச காலம்" துவங்கும் என்று வாசிக்கிறோம் -

**வெளிப்படுத்தல் 20:7**

**"அந்த ஆயிரம் வருஷம் முடியும்போது சாத்தான் தன் காவலிலிருந்து விடுதலையாகி.."**

இது பரிபூரணமாக்கப்பட்ட மனுக்குலத்தின்மீது அனுமதிக்கப்படுகிற சோதனையும் கடைசியான நியாயத்தீர்ப்பின் காலப்பகுதியாகும்.

இந்த கொஞ்ச காலம் என்பது எவ்வளவு என்பதை நாம் அறியோம். ஆனால் அதற்குப்பின்பு பரிபூரண மனுக்குலத்தைக் கொண்ட பரிபூரண பூமி ..முடிவில்லாத யுகா யுகத்திற்குள் பிரவேசிக்கும்.


**உண்மையாகவே மாபெரும் தெய்வீகத்திட்டத்தை இந்த பாவ மனுக்குலத்திற்கு தந்த நம்முடைய தேவனும்... அவருடைய நேச குமாரனாகிய , நம் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவும் அதிசயமானவர்களே ஆமென்.**


**இந்த சத்தியங்களை பற்றி மேலும் அறிந்து கொள்ள தொடர்பு கொள்ளவும்:**

For Further Details Please Contact:

bibleresearchandstudy@gmail.com, victorgnanaraj01@gmail.com victor_vicky

+919443321874 https://www.facebook.com/biblereserch/



தேவனுடைய தெய்வீக திட்டம்
B
இரண்டாம் உலகம்
C
மூன்றாம் உலகம்
A
முதல் உலகம்
D
E
யூத யுகம்
F
சுவிசேஷ யுகம்
G
மேசியாவின் யுகம்
H
1 2 3 4 5 6 7 8 9 10 11
K
L
M
N
P
R
ஆதாம்
ஆபிரகாம்
இயேசு
a
b
c
d
f
m
n
p
S
W
ISRAEL
பின்வரும் யுகங்கள்
"....நீ தரிசனத்தை எழுதி, அதைக் கடந்தோடுகிறவன் வாசிக்கும்படிப் பலகைகளிலே தீர்க்கமாக வரை."